MDU DC 2 - 1562

# ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-06

**ந.க.எண். 4015/ஆ7/ஒபக/2022 நாள் 01.12.2022**

**பொருள்:-** பள்ளிக்கல்வி – கல்விசாரா செயல்பாடுகள் – 2022-2023 ஆம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் – பின்பற்ற வேண்டிய கூடுதல் வழிமுறைகள் – முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

01 DEC 2022

**பார்வை:-** தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022 நாள் 22.08.2022.

******

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது வாரமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன.

2. அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, சிறார் திரைப்படங்களை அவற்றிற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் திரையிடவேண்டும். திரைப்படங்களைத் திரையிடுவது தொடர்பாக அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்ட திரைப்பட சுற்றறிக்கைதொடர்பாக, **இம்மாதம் டிசம்பர் 3ம் தேதி உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு "SHWAAS" என்ற மராத்திய மொழி திரைப்படம் திரையிட திட்டமிடப்பட்டுள்ளது.** இதனை டிசம்பர் 3ம் தேதி பள்ளி வேலை நாளாக இருப்பின் திரையிடவேண்டும். 03.12.2022 அன்று பள்ளி வேலைநாளாக இல்லாதபட்சத்தில் 05.12.2022 அன்று திரையிட வேண்டும். இந்த படம் 2004ம் ஆண்டில் ஆஸ்கார் விருதுகளுக்காக இந்தியாவின் சார்பில் அதிகாரபூர்வமாக அனுப்பப்பட்டது. மேலும் சிறந்த வெளிநாட்டு மொழி திரைப்படத்திற்கான அகாடமி விருதில் 6வது இடத்தைப் பிடித்துள்ளது. படத்தின் சுருக்கம் இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

(P.T.O)

3. பார்வையில் காணும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட தகவல்களுடன் கூடுதல் தகவல்களாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றிட சார்ந்த பள்ளிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**4. ஒவ்வொரு பள்ளியிலும் திரைப்படத் திரையிடல் நடவடிக்கைக்காக ஒருஆசிரியருக்கு பொறுப்பு அளிக்க வேண்டும். தலைமை ஆசிரியருடன் இணைந்து பொறுப்பு ஆசிரியரும் பின்வருவனவற்றை உறுதிசெய்ய வேண்டும்.**

<u>திரையிடலுக்கு முன்:</u>

- இணைப்பு மூலம் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட திரைப்படத்தை மட்டும் திரையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது..
- வேறு எந்தப் படத்தையும் மாற்றாகக் காட்டக்கூடாது, ஏனெனில், ஆவணப்படுத்தப்படும் படத்திலிருந்து மாணவர் வாரியாக கற்றல் மதிப்பீடு செய்யப்படும்.
- பதிவிறக்கம் செய்வதில் சிக்கல் இருந்தால், பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்றுநர் அல்லது மாவட்ட ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.
- பொறுப்பு ஆசிரியர் திரைப்படம்திரையிடும் நாளுக்கு முன் படத்தைப் பார்க்க வேண்டும், கதை சுருக்கத்தைப் படித்து, படத்தின் கதைக்களத்தை வெளிப்படுத்தாமல் குழந்தைகளுக்கு அடிப்படை பின்னணியைக் கொடுக்க வேண்டும்.
- வகுப்பறையை திரையிடலுக்கு தயார்செய்ய வேண்டும். வகுப்பறையில் வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்று வசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.
- மின் இணைப்புகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- நிகழ்ச்சியின் போது வகுப்பறையில் போதுமான குடிநீர் வசதி இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- வகுப்பறையில் திரைப்படக்காட்டி (Projector) இல்லாத பள்ளிகளில், பள்ளிமேலாண்மைக் குழுக்கள் (SMC) வாயிலாக வாடகைக்கு பெற்று திரையிடவேண்டும்.
- திரையிடலுக்கு ஒரு சுவரைப் பயன்படுத்தினால் அது தெளிவான வெள்ளை சுவராக இருக்க வேண்டும்.

## திரைப்படத்தைப் பதிவிறக்கம் செய்தல்:

- கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்யவும்
- shorturl.at/advH5

  (https://drive.google.com/drive/folders/1YtxhMp4dykuicBMUonPZqPlzzkpR6vfs)
- இணைப்பைக் கிளிக் செய்தவுடன், அது பதிவிறக்கமாகும் வரை காத்திருக்கவும். அதிவேக இணையம் என்றால் 7-10 நிமிடங்கள் அல்லது குறைந்த வேக இணைய வசதியாக இருந்தால் 15-20 நிமிடங்கள் வரை ஆகும்.
- ஆனால் அது முழுமையாக பதிவிறக்கம் செய்யும் வரை காத்திருக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

## திரையிடலுக்கு பின்:

- பார்வையில் காணும்சுற்றறிக்கையில் பகிரப்பட்டுள்ள ஸ்பாட்லைட் (For Spotlight) கேள்விகள் தயாராக வைத்திருக்க வேண்டும். (திரைப்படம் மற்றும் அதன் கதைக்களம், மையக் கதாபாத்திரங்கள், துணை நடிகர்கள், கேமரா, விளக்குகள், நிகழ்வுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட ஸ்பாட்லைட் கேள்விகள்).
- மாணவர்கள் ஒரு குழுவாக அல்லது தனி நபராக திரைப்படத்தைச் சுற்றி ஒரு செயல்பாடுசெய்யலாம்.
  - படத்தில் இருந்து ஒரு காட்சியை உருவாக்குதல்
  - படத்தில் நடிக்கும் நடிகர்களைப் போலவே நடிப்பது
  - கதாபாத்திரங்கள் தமிழில் பேசக்கூடியது போல் உருவாக்குதல்
  - சில குறிப்பிட்ட காட்சிகளைப் பற்றி விவாதித்தல்
  - இத்திரைப்படத்திற்கு வித்தியாசமான கதையை எழுத முடியுமா? - அது வேறு ஒரு தொடக்கத்தையும் வேறு முடிவையும் கொண்டிருக்கும்.
  - இத்திரைப்படத்தை ஒரு நாடகமாக உருவாக்க முடியுமா? ஆம் எனில், குழுக்களாக உருவாக்க அவர்களை ஊக்குவிக்கவும்.

(P.T.O)

இணைப்பு :

1. திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்
2. திரைப்படத்தின் சுருக்கம்
3. For Spotlight
4. திரையிடுவதற்கு முன்னும் பின்னும் கேட்க வேண்டிய கேள்விகள்

மாநிலத் திட்ட இயக்குநர்

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்துமாவட்டங்கள்

ந.க. எண்: 1562 /D2/ [illegible]/2022 நாள்: 02-12-2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

For முதன்மைக் கல்வி அலுவலர் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி) வேலூர்

பெறுநர்
அரசு நகராட்சி/உயர்நிலை/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்

நகல்:
1. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) வேலூர் மாவட்டம்
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள் - வேலூர் மாவட்டம்
5. வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ) வேலூர் மாவட்டம்.

ந.க.எண். 4015/ஆ7/ஒபக/2022, நாள் 01.12.2022

**இணைப்பு 1 : திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்**

**படம்: SHWAAS**

**கால அளவு: 100 நிமிடங்கள் (சிறப்பு அழைப்பாளர்களுடன்)**

| வ .எண் | கால அளவு | அம்சம் | நடத்தக்கூடியவர் / உறுதி செய்பவர் |
|---|---|---|---|
| 1 | 10 நிமிடங்கள் | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | 15 நிமிடங்கள் | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட வேண்டும் | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 3 | 5 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் அறிமுகம் | த.ஆசிரியர்/ பொறுப்பு ஆசிரியர் |
| 4 | 5 நிமிடங்கள் | படத்தின் அறிமுகம் (கதை சுருக்கம்) மற்றும் படம் திரையிடப்படுவதற்கு முன் மாணவர்களிடம் கேட்கவேண்டிய ஸ்பாட்லைட் கேள்விகள் (Spotlight) (இணைப்பு - 3) | பொறுப்பு ஆசிரியர் |
| 5 | 100 நிமிடங்கள் | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | 7-10 நிமிடங்கள் | கருத்து அமர்வு | 2 - 3 குழந்தைகள்பேசுவார்கள் |
| 7 | 15 நிமிடங்கள் | கவனத்தை ஈர்த்தல் +(Spotlight) (இணைப்பு - 3) | பொறுப்பு ஆசிரியர் (ஒரு பெரிய குழுவாக இருந்தால் பிற ஆசிரியரின் உதவியை பெறலாம்) |

(P.T.O)

| | | | |
|---|---|---|---|
| 8 | 15 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 9 | 3 நிமிடங்கள் | நன்றி உரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |

**இணைப்பு–2 SHWAAS (மராத்தி திரைப்படத்தின் சுருக்கம்)**
**திரைக்கதை & இயக்குனர்: சந்தீப் சாவந்த்**
**மொழி: மராத்தி (தமிழ் வசன வரிகளோடு)**

ஷ்வாஸ்

ஷ்வாஸ் (English: The Breath) என்பது 2004 ஆம் ஆண்டு வெளியான மராத்தி திரைப்படம். இத்திரைப்படம் 2004 ஆம் ஆண்டு ஆஸ்கார் விருதுகளுக்கான சிறந்த வேற்றுமொழித் திரைப்படத்திற்கான பிரிவில் இந்தியாவில் இருந்து தேர்வு செய்யப்பட்டதுடன் அகாடமி விருதில் 6வது இடத்தைப் பிடித்தது. இதன் கதைக்களம் புனேவில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது.

"ஷ்வாஸ்" என்ற இந்த மராத்தி திரைப்படம், விழித்திரை புற்றுநோயால் முழுவதுமாக பாதிக்கப்பட்ட பரசுராம் (பார்சியா) என்ற சிறுவனுக்கு மேற்கொள்ளவிற்கும் அறுவை சிகிச்சை சார்ந்து அவனது தாத்தாவிற்கும், மருத்துவர்களுக்கும் இடையே ஏற்படும் போராட்டங்கள், அதை கடந்து மருத்துவர்களின் அன்பு, அரவணைப்பு, ஆலோசனைகளுடன், தாத்தாவின் சம்மதத்தோடு வெற்றிகரமாக அச்சிறுவனுக்கு நடைபெறும் அறுவை சிகிச்சையை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, இத்திரைப்படத்தில், விழித்திரை புற்றுநோயால் பாதிக்கப்பட் அச்சிறுவனுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இல்லையெனில் அச்சிறுவன் உயிரிழக்க நேரிடும் என்றும், அவ்வாறு அறுவை சிகிச்சை மேற்கொள்ளும்போது அச்சிறுவன் அவனது கண்பார்வையை இழக்க நேரிடும் என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையை, அச்சிறுவனின் தாத்தாவிற்கு மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஏதோ ஒரு சில காரணங்களால் அச்சிறுவனுக்கான அறுவை சிகிச்சையினை மருத்துவர்கள் ஒரு நாள் தள்ளி வைக்கின்றனர். அறுவை சிகிச்சை செய்யும் நாளன்று மதியம் தாத்தாவும் பேரனும் மருத்துவமனையிலிருந்து காணாமல் போகிறார்கள். அறுவை

சைக்கான ஏற்பாடுகள் தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் இருவரும் காணாமல் போனதை அறிந்த மருத்துவர்கள் அவர்களை அங்குமிங்குமாக தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வேளையில் திடீரென மருத்துவர்கள் முன்னே தோன்றிய தாத்தாவையும், பேரனையும் பார்த்த மருத்துவர்கள், கோபத்துடன் அவர்களிடம் எங்கு சென்றீர்கள் என்று கேட்கின்றனர். அதற்கு தாத்தா சிறிதும் பதற்றமில்லாமல், மருத்துவரிடம், அறுவை சிகிச்சையினால் என் பேரனுக்கு கண்பார்வை இழக்க நேரிடும் என்றும், ஆகவே கிடைத்த ஒரு நாளில் கடைசியாக இந்நகரத்தின் காட்சிகளை காண்பிப்பதற்காகவே என் பேரனை வெளியே அழைத்துச் சென்றேன் என்று சற்றே வருதத்துடன் கூறினார். தாத்தாவின் மனநிலையை அறிந்த மருத்துவர்கள், அவருடைய மனக்குழப்பங்கள் மற்றும் ஐய்யங்களைப் போக்கி அச்சிறுவனுக்கான அறுவை சிகிச்சையினை வெற்றிகரமாக நடத்தி முடிக்கின்றனர்.

இந்த திரைப்படம், மருத்துவர்களும், செவலியர்களும் பொதுமக்களுக்கு எவ்வாறு ஆதரவாக இருந்து சேவை புரிகிறார்கள் என்பதையும், அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்கு ஏற்படும் சவால்களை சமாளித்து எவ்வாறு கடந்து செல்கிறார்கள் என்பதையும் தெளிவாக விளக்குகிறது.

மொத்தத்தில் இப்படம் வாழ்க்கையில் எந்த ஒரு இயலாமையையும் நேர்மறையான அணுகுமுறையைக் கொண்டு நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது

**<u>இணைப்பு – 3 For Spotlight</u>**

1. இத்திரைப்படத்தின் மூலக்கரு / மையக் கருத்து என்ன?

2. கதை எதைப் பற்றியது அல்லது யாரைப் பற்றியது? அதை எப்படி அறிந்தீர்கள்?

3. கதையில் நிகழும் மிக முக்கியமான சம்பவங்கள் என்னென்ன?

4. எந்தக் கதாப்பாத்திரம் உங்களை மிகவும் கவர்ந்தது?

5. திரைப்படத்தின் வாயிலாக தாங்கள் கற்றுக் கொண்ட முக்கிய கருத்துக்கள் என்னென்ன?

6. இப்படத்திற்கு வண்ணங்கள் எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?

(P.T.O)

7. இப்படத்திற்கு இசை அல்லது ஒலி எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?

8. எந்த ஒரு கதாப்பாத்திரத்திற்கு நீங்கள் பின்னனிக்குரல் கொடுக்க விரும்புவீர்கள்? அப்படி இருப்பின் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

9. இத்திரைப்படத்தை பற்றி உங்கள் நண்பர்களுடன் உரையாடுவீர்களா? அவர்களை இப்படத்தைக் காணச் சொல்வீர்களா? ஏன்?

10. இத்திரைப்படம் பற்றி உங்களின் எண்ணங்களை 2 வரிகளில் எழுதுக.

ஒவ்வொருமாதமும் பொறுப்பு ஆசிரியர் திரைப்படத்தை முன்னரே பார்த்துவிட்டு , அத்திரைப்படத்தையொட்டி மேலே கொடுக்கப்பட்டுள்ள Spotlight போன்ற கேள்விகளை வடிவமைத்துக் கொள்ளலாம்.

**இணைப்பு 4: திரையிடுவதற்கு முன்னும் பின்னும் கேட்க வேண்டிய கேள்விகள் :**

<u>திரைப்படம் திரையிடப்படுவதற்கு முன் உரையாட வேண்டியவை</u>

மாணவர்களிடம் கேட்க வேண்டிய வினாக்கள்:

1. மாற்றுத்திறன் என்பது பற்றி உங்கள் பார்வை என்ன?
2. யாரையெல்லாம் நாம் மாற்றுத்திறனாளிகள் என்று கூறுவோம்?
3. மாற்றுத்திறனாளி மாணவர்கள் பள்ளியில் சந்திக்கும் பிரச்சினைகள் என்னென்ன?

<u>திரைப்படம் திரையிட்ட பின் உரையாட வேண்டியவை</u>

மாணவர்களிடம் கேட்க வேண்டிய வினாக்கள்:

1. இந்த திரைப்படம் உங்களுக்கு பிடித்திருக்கிறதா?
2. திரைப்படத்தில் உங்களுக்கு பிடித்த பகுதி என்ன? ஏன்?
3. திரைப்படத்தில் உங்களுக்கு பிடித்த நபர் யார்? ஏன்?
4. இந்த திரைப்படத்தின் மூலம் நீங்கள் தெரிந்துக்கொண்ட புதிய தகவல் என்ன?
5. உங்களுக்கு மாற்றுத்திறனாளி நண்பன் இருந்தால், நீங்கள் அவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?